பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 25 | வெள்ளிக்கிழமை | 11.10.2024 | அதிர்வு 070

## 4 மாவட்டங்களில் தமிழரசு நேற்று வேட்புமனுத் தாக்கல்

### திருகோணமலையில் இன்று

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி, திருகோணமலை தவிர்ந்த 4 மாவட்டங்களில் நேற்று வேட்புமனுக்களைத் 06




# வெற்றிவாகை சூடுவோம்!

## தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மக்களின் பெரும் ஆதரவுடன் நாங்கள் வெற்றியடைவோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06



## ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு யாழில் இன்று வேட்புமனுத் தாக்கல்



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலால் அதிருப்தியடைந்த குழுவால் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு எனும் பெயரில் புதிதாக உருவாக்கப்பட்ட கட்சி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடவுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் இந்தச் சுயேச்சைக் குழுவுக்கான வேட்பாளர்கள் வேட்புமனுவில் நேற்று வியாழக்கிழமை மாலை கையொப்பமிட்டனர்.

இதில் தமிழரசுக் கட்சியின் 06



இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து புறப்பட்ட அதிருப்தி குழு ஒன்று ஜனநாயகத் தமிழரசு என்ற பெயரில் ஒரு தரப்பை அவசர அவசரமாக உருவாக்கி, அதன் பேரில் வெளியிலிருந்து இரண்டொருவரையும் சேர்த்து, ‘ஜனநாயகத் தமிழரசு கூட்டமைப்பை’ உருவாக்கி இருக்கிறார்கள் எனத் தகவல் வெளியாகி உள்ளது. கடைசியாக அவர்கள்ஒரு சுயேச்சைக் குழுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தலில் களமிறங்குகிறார்கள்.

இது ஒரு வகையில் ‘அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் செயல்’ போன்ற எனத்தோன்றுகின்றது.

அது குறித்துப் பார்க்க முதல் ஒரு விடயம்.

இந்த ஜனநாயக தமிழரசு குழுவின் பிரகிருதிகள் – முக்கியஸ்தர்கள் – சிலர் நேற்று முன்தினம் சிவஞானம் சிறிதரனைத் தொடர்பு கொண்டு, தமிழரசை விட்டு விட்டு வந்து தங்களின் ஜனநாயக தமிழரசில் இணைந்து போட்டியிடுமாறு அழுத்தத்திற்கு மேல் அழுத்தம் 06



# வன்னியில் தமிழரசுக் கட்சி வேட்புமனு!

(கி.வசந்தன்)

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தனர்.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. அந்தவகையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்று வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், ஆசிரியர் கா.திருமகன், சமூக செயற்ப்பாட்டாளர் தே.சிவானந்தராசா, அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.கலைதேவன் ஆகியோரும், முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், விரிவுரையாளர் ந.ரவீந்திரகுமார், ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் வ.கமலேஸ்வரன் ஆகியோரும், மன்னார் மாவட்டம் சார்பாக சட்டத்தரணி செ.டினேசன், சட்டத்துறை மாணவி அ.கலீபா ஹலிஸ்ரா ஆகியோரும் வேட்பாளர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.











# முதல் பெண் மாவீரர் மாலதி நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ஈழ விடுதலைப் போரின் முதற்பெண் மாவீரர் 2ஆம் லெப்.மாலதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தர்மபுரம் வட்டாரக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு நினைவுரையாற்றியதோடு, கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட, பொருண்மியம் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த இரு நூறு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா உள்ளிட்ட பிரதேச மக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.




# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வெளிநாடு செல்வதற்கு தடை



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு வெளிநாடு செல்ல கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று தடை விதித்தது.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சொகுசு வாகனம் எவ்வாறு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது, யார் பயன்படுத்துகின்றனர் என்பது குறித்து விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

# கிரேக்க திறைசேரி பத்திர கொள்வனவு விவகாரம் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட 4 பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

201 2ஆம் ஆண்டு கிரேக்கம் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த போது, அந்நாட்டின் திறைசேரிப் பத்திரங்களை கொள்வனவு செய்ததன் மூலம் 184 கோடி ரூபாவுக்கும் அதிக இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, பிரதிவாதிகளை தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான பிணை அடிப்படையில் விடுவிக்க மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன், பிரதிவாதிகளுக்கு வெளிநாடு செல்ல தடை விதித்ததுடன் கடவுச்சீட்டுகளை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.



# ஐக்கிய மக்கள் சக்தியுடனான உறவை முறித்தது ஐக்கிய குடியரசு முன்னணி

தமது கட்சியான ஐக்கிய குடியரசு முன்னணியுடன் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியதால் இம்முறை பொதுத் தேர்தலில் தமது கட்சியிலிருந்து எவரும் போட்டியிட மாட்டார்கள் என கட்சியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை அறிவித்தார்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி கட்சி 2023 ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அதன்பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒப்பந்தமிட்டு சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவாக செயற்பட்டது.

இவ்வாறான சூழலில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது கட்சியிலிருந்து எவரும் போட்டியிட மாட்டார்கள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சியுடனான ஒப்பந்தத்தை மீறியதால் தமது ஆதரவை விலக்கிக் கொள்வதாகவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

# அனுப பஸ்குவலின் வங்கி கணக்குகளை 3 மாதங்களுக்கு இடைநிறுத்த உத்தரவு



ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அனுப பஸ்குவலின் சில வங்கிக் கணக்குகளை 3 மாதங்களுக்கு இடைநிறுத்த மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே நேற்று உத்தரவிட்டார்.

2025 ஜனவரி 4 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2023 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் 53 (4) சரத்திற்கமைய மேற்படி வங்கிக் கணக்குகளின் ஊடாக எந்தவொரு கொடுக்கல் – வாங்கலையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்ள முடியாது என நீதிபதி இதன்போது உத்தரவிட்டார்.



# நிலந்த ஜயவர்தன தொடர்பான மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவு

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உத்தர விடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தர விட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை தடுப்பதற்கு புலனாய்வு தகவல்கள் முன்கூட் டியே கிடைத்திருந்த போதிலும் அதனை தடுப்பதற்கு நட வடிக்கை எடுக்காததை ஆட்சேபித்து நிலந்த ஜயவர்தனவிற்கு எதிராக சமூக மற்றும் சமாதான மையம் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜ கருணா மற்றும் மகேன் கொபல்லவ ஆகியோர் முன்னி லையில் இந்த மனு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப் பிடப்பட்டுள்ளனர்.

உயர் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய தமது சேவை பெறுநருக்கு எதிராக புதிய விசாரணை ஆரம்பிக் கப்பட்டுள்ளதால் மனுவை முன்கொண்டு செல்வதற் கான தேவை இல்லை என நிலந்த ஜயவர்தன சார் பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சந்தக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

தகவல்களை உறுதிப்படுத்துவது அல்லது மனுவை மீளப் பெறுவது தொடர்பில் ஆராய்வதற்காக நவம்பர் மாதம் 13 ஆம் திகதி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டது.

# தபால் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பிக்கும் காலம் நிறைவு




பொதுத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தது.

இதேவேளை, பொதுத் தேர்தலை முன்னிட்டு இதுவரை 293 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக் களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று நண்ப கல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொடுத்தனர்.

ஆனால் சிறிதரன் அசையவில்லை. தமிழரசுக் கட்சியிலிருந்து தான் வெளியேறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று உறுதியாகவும், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் பதில் அளித்திருக்கின்றார் சிறிதரன்.

அதற்காக அவருக்கு ஒரு ஸல்யூட்! இனி விடயத்துக்கு வருவோம்.

தமிழரசில் சுமந்திரனின் அதிகாரம் எல்லை மீறி விட்டது, அதனால் கட்சியை விட்டு வெளியே வந்து, தனியாக ஜனநாயகத் தமிழரசை உருவாக்கி, தேர்தல் களம் இறங்குகின்றோம் என்று அடித்து கூறுகின்றார்கள் அந்த அதிருப்திக் குழுவினர்.

நல்லது. ஆனால் இப்படித் தனிக் குழுவாகத் தமிழரசிலிருந்து அவர்கள் பிரிந்த காரணத்தினால் கட்சிக்குள் சுமந்திரனின் நிலைமைதான் மேலும் ஸ்திரமடையப் போகின்றது.

தமிழரசில் சுமந்திரனுக்கான ஆதரவுத் தளம் நிலையானது. அந்த ஆதரவாளர்கள் சுமந்திரனின் ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து விலகப் போகின்றவர்கள் அல்லர்.

ஆனால் சட்டத்தரணி கே.வி.தவராஜா போன்றோர் உருவாக்கி இருக்கும் சுயேச்சை குழுவுக்கு வாக்களிக்கக் கூடியவர்கள், தமிழரசில் சுமந்திரனுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருப்பவர்கள்.

அவர்கள் இந்தத் தேர்தலில் எக்காரணம் கொண்டும் சுமந்திரனுக்கு வாக்களித்திருக்கக் கூடியவர்கள் அல்லர்.

இப்போது அவர்களை தமிழரசிலிருந்து பிரித்து, தங்களின் சுயேச்சைக் குழு பக்கம் இவர்கள் திருப்பப் போகிறார்கள்.

இதனால் தமிழரசு கட்சிக்கு விழக்கூடிய வாக்குகள் மட்டுமல்ல, கட்சிக்குள் சுமந்திரனுக்கு மாறான தரப்புகளுக்கு – குறிப்பாக ஶ்ரீதரன்போன்றோருக்கு–விழக்கூடிய விருப்பு வாக்குகளையே இந்த அதிருப்திக் குழுவினர்கள் திருப்பப் போகிறார்கள்.

ஆக, கட்சிக்குள் – சுமந்திரன் எதிர்ப்பு தரப்பினரின் ஆதரவை இவர்கள் உடைத்துப் பிளந்து, கட்சிக்குள் சுமந்திரனின் கையை மேலும் ஸ்திரப்படுத்தப் போகிறார்கள்.

அதனால் தான் அவர்களின் வேலையை ஆரம்பத்தில் ‘அவளை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் வேலை’ என்று கூறினேன.

## ஜனநாயகத் தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முன்னாள் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி செயலாளர் விமலேஸ்வரி, முன்னாள் போராளி வைத்திலிங்கம் பாலசுரேஷ் உள்ளிட்ட 9 பேர் கையொப்பமிட்டனர்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளனர் என்று அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை

## விமல் வீரவன்ச அறிவிப்பு



இம்முறை பொதுத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடப் போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால தொடர்பு மற்றும் அதற்கு மதிப்பளிக்கும் அரசியல் இயக்கமாக ஜனாதிபதிக்கு கிடைத்த மக்கள் ஆணையைபாதுகாப்பதற்காகமுன்னிற்பதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக நாடாளுமன்ற வகிபாகத்தை விட அதற்கு வெளியில் முன்னெடுக்கப்படும் செயற்பாடு முக்கியமானதாகவும் பலமானதாகவும் அமைய வேண்டும் என அவரது அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி ஒரு கட்சியாகவோ அல்லது சுயேச்சையாகவோ போட்டியிடாது எனவும் இது கட்சியின் கூட்டுத் தீர்மானம் என்றும் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வெற்றிவாகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9.40 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தனர். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை தமிழரசுக் கட்சியால் யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனு யாழ். தெரிவத்தாட்சி அலுவலகத்தில் இன்று (நேற்று) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எமது கட்சியில் சிவஞானம் சிறீதரனை முதன்மை வேட்பாளராக உள்ளடக்கி இந்த வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வவுனியாவிலே வேட்புமனுவைத் தாக்கல் செய்கின்ற காரணத்தினாலே யாழ். மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் இந்த வேட்புமனுவைக் கையளித்துள்ளார்.

நாளை (இன்று) வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் காலம் முடிவடைகின்ற போது அந்த வேட்புமனு ஏற்றுக்கொள்ளப் பட்டதா என்று அறிந்து எங்களுடைய மற்றைய கருத்துக்களை நாங்கள் சொல்வோம்.

ஆனாலும், இந்தத் தடவை எங்களுடைய வேட்புமனுவிலே இளையவர்களுக்கும் ஆற்றல் உள்ளவர்களுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று பல தடவைகள் நாங்கள் சொல்லி வந்த போதும் அது இந்தத் தடவை பெருமளவுக்குச் சாத்தியமாகி இருக்கின்றதென்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றோம்.

அதிலும் இம்முறை இரண்டு பெண் வேட்பாளர்களை நாங்கள் நிறுத்தியுள்ளோம். அதிலும் கடந்த தேர்தலை விடவும் ஒன்றிலிருந்து இரண்டாக உயர்ந்துள்ளமை நூறு சதவீத அதிகரிப்பாகும்.

எங்களுடைய வேட்பாளர்களின் சராசரி வயது 48 ஆகும் . இந்த ஒன்பது பேரினதும் சராசரி வயது ஐம்பதுக்கும் குறைவாகத்தான் இருக்கின்றது. இது முற்போக்கான நல்ல விடயம் என்பதையும் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.” – என்றார்.

## 4 மாவட்டங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்சி..)

தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று வியாழக்கிழமை 4 மாவட்டங்களில் வேட்புமனுக்களைத் தமிழரசுக் கட்சியினர் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கான வேட்புமனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

அந்தவகையில் யாழப்பாணம் மாவட்டத்துக்கான வேட்புமனு முதன்மை வேட்பாளர் சி.சிறீதரன் ஊடாகவும், வன்னி மாவட்டத்துக்கான வேட்புமனு முதன்மை வேட்பாளர் ப.சத்தியலிங்கம் மூலமாகவும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான வேட்புமனு முதன்மை வேட்பாளர் இரா.சாணக்கியன் ஊடாகவும் மற்றும் அம்பாறை மாவட்டத்துக்கான வேட்புமனு முதன்மை வேட்பாளர் த.கலையரசன் மூலமாகவும் தாக்கல் செய்யப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்துக்கான வேட்புமனு அந்த மாவட்ட முதன்மை வேட்பாளர் ச.குகதாசனால் இன்று வெள்ளிக்கிழமை காலை தாக்கல் செய்யப்பட வுள்ளது.

# பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி முன்னிலையில் முர்து பெர்னாண்டோ பதவிப்பிரமாணம் செய்தார்



பதில் பிரதம நீதியரசராக முர்து பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க முன்னிலையில் அவர் நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

# தேர்தலில் போட்டியிடவில்லை: நவீன் திசாநாயக்க அறிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என சப்ரகமுவ மாகாண முன்னாள் ஆளுநர் நவீன் திசாநாயக்க அறிவித்துள்ளார்.

கேஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதன் மூலம், ஐக்கிய தேசியக் கட்சி தரப்பினருக்குப் பாரிய அநீதி ஏற்படுவதாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்திய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்கவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார்.



# கடந்த 12 மணித்தியாலங்களில் கொழும்பில் அதிகளவு மழை



கடந்த 12 மணித்தியாலங்களில் கொழும்பு மாவட்டத்தில் அதிகளவிலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டவியல் திணைக்களம் நேற்று இரவு தெரிவித்தது.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தின் ஹங்வெல்ல பகுதியில் 141.5 மில்லி மீற்றர் வரையிலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் வொகன் தோட்டத்தில் 105.5 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் ஹல்வத்துர தோட்டத்தில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், ஹொரணையில் 98 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, நுவரெலியா, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# சவூதி அரேபிய தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் நசார் அல்தசம் அல்கஹ்தானி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸநாயக்கவின் வெற்றியை சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் வாழ்த்துச் செய்தியை, தூதுவர் அல்கஹ்தானி ஜனாதிபதியிடம் கையளித்தார். பிராந்தியத்தின் தற்போதைய நிலைமை, சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் நீண்டகால ஆதரவு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு தூதுவர் அல்கதானி தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

சவூதி அரேபியாவுக்கான இலங்கை தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பது தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி மற்றும் தூதுவரின் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான தேசிய கொள்கையொன்றை வகுக்க அரசாங்கத்தை ஊக்குவித்த சவூதி அரேபிய தூதுவர், சவூதி அரேபிய முதலீடுகளை இந்நாட்டிற்கு ஈர்ப்பதற்கு இலங்கையில் சாதகமான சூழலை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையில் ஏற்கனவே சவுதி அரேபிய முதலீடுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் எதிர்கால ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் என்றும் தூதுவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த சந்திப்பின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகள் மேலும் வலுவடையும் என தூதுவர் அல்கஹ்தானி குறிப்பிட்டார்.

# லஞ்ச விசாரணை ஆணைக்குழுவிற்கு புதிய பணிப்பாளர் நாயகம் நியமிப்பு




லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் இடைக்கால புதிய பணிப்பாளர் நாயகமாக எம்.ஆர்.வை.கே.உடுவெல நியமிக்கப்படடுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அவர் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக செயற்பட்டார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொருளாதார மேம்பாடு

இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத் தன்மை அடைந்துள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கான இலங்கையின் அபிவிருத்தி அறிக்கை நேற்று வியாழக்கிழமை உலக வங்கியால் வெளியிடப் பட்டது.

இதன்படி, இலங்கையின் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 4.4 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் கடந்துள்ளதாக உலக வங்கி அறிவித் துள்ளது.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இலங்கை இருந்த மிக மோசமான பொருளாதார நெருக்கடிக் கட்டத்துடன் ஒப்பிடுகையில் இப்போதைய நிலைமை எவ்வளவோ மேல் என்று சொல்லலாம்.

திடீரெனக் கடனிறுக்க முடியாத வங்குரோத்து நாடு என்ற மோசமான கட்டத்தில் இலங்கை தடுமாறிய போது, அதிலிருந்து நாடு மீண்டெழுமா என்ற அச்சம் பலருக்கும் இருந்தது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள், எரிபொருள்கள் போன்றவற்றைக் கூட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியாத வக்கற்ற - வழியற்ற - நிலையில் நாடு தடுமாறியது.

எங்கும் வரிசை யுகம். எல்லாவற்றுக்கும் பற்றாக்குறை. தட்டுப்பாடு. ஒவ்வொரு குடும்பத்தினரதும் அன்றாட வாழ்வு நெருக்கடிக்குள் என்ற இக்கட்டு ஏற்பட்டது.

வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்த முடியாத நாடு என்ற கட்டத்தை இலங்கை அடைந்தமையால் புதிய கடன்களை வழங்கவோ உதவிகளை தரவோ சர்வதேச நாடுகள் பின்னடித்தன.

அயல் தேசமான இந்தியாதான் கடன் மீளளிக்க வக்கற்ற இலங்கையின் இயலாமை நிலையை உணர்ந்து கொண்டு, விரைந்து உதவ முன் வந்தது. பிரதி உபகாரம் பார்க்காமல், 'உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைய' விரைந்து வந்த இந்தியா, அப்படி உதவியிருக்காவிட்டால் இலங்கை மீண்டெழுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத விவகாரமாகி இருக்கும்.

எனினும் இவ்வளவு குறுகிய காலத்தில் - இரண்டு ஆண்டுகளுக்குள் - ஓரளவுக்கேனும் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கு இலங்கை மேம்படும் என்று யாரும் நம்பி இருக்கவில்லை.

பல்வேறு சர்ச்சைகள், நெருக்கடிகள், விமர்சனங்களுக்கு, மத்தியில் அந்தச் சமயத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க சரியோ, பிழையோ நாட்டின் பொருளாதாரத்தை ஒரு ஸ்திரமான கட்டுறுதி நிலையை நோக்கித் தூக்கி நிறுத்தி இருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை.

தான் மீளச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகளை இலங்கை இன்னும் செலுத்தத் தொடங்கவில்லை. ஆயினும், அந்தப் பின்னடைவு நிலைமைக்கு மத்தியிலும் கூட, ஸ்திரமான பொருளாதார நிலையை நோக்கி நாடு முன்னேறி இருக்கின்றது என்பது மெச்சப்படத் தக்க வேண்டியதே.

எவ்வாறாயினும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு, ஏற்றுமதியை அதிகரித்தல், வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல், பெண் தொழிலாளர் பங்கேற்பை அதிகரித்தல், உற்பத்தித்திறனை மேம்படுத்தல், வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் நிதித் துறையில் உள்ள பாதிப்புகள் போன்ற சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்ட முக்கிய சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வர்த்தகத்தின் மூலம் உயர் மற்றும் நிலையான வளர்ச்சியை அடைவதற்கான நாட்டின் திறனை உலக வங்கி நேற்றைய தனது அறிக்கையில் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கை வருடாந்தம் 10 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் பயன்படுத்தப் படாத ஏற்றுமதி திறனைக் கொண்டுள்ளது. தேவையான சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டால் சுமார் 142,500 புதிய வேலைகளை உருவாக்க முடியும்.

உற்பத்தி, சேவைகள் மற்றும் விவசாயத்தில் ஏற்றுமதியை பல்வகைப்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் குறிப்பிடத்தக்க வாய்ப்பு உள்ளமையும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதிலிருந்து மேலும் மேம்பட்ட பொருளாதார ஸ்திர நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்வது புதிதாகப் பதவியேற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் பொறுப்பாகும்.

# பூரண அரசு மரியாதையுடன் ரத்தன் டாடா உடல் தகனம்

## ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி





தொழிலதிபர் ரத்தன் டாடாவின் உடல், மும்பை வோர்லி மயானத்தில் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, அவரது உடலுக்கு ஆயிரக் கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

டாடா குழுமத்தின் தலைவராக இருந்த 86 வயதான ரத்தன் டாடா உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு காலமானார். இதனையடுத்து மும்பையில் உள்ள அவரது இல்லத்துக்கு உடல் கொண்டு வரப்பட்டது. நேற்று காலை, அவரது வீட்டில் இருந்து பொது மக்களின் அஞ்சலிக்காக உடல் தெற்கு மும்பையில் உள்ள என்.சி.பி.ஏ. எனப்படும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கான தேசிய மையத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர்கள் தேவேந்திர பட்னவிஸ், அஜித் பவார், குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், சிவ சேனா(யுபிடி) தலைவர் உத்தவ் தாக்கரே, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் உள்ளிட்டோர் ரத்தன் டாடாவின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்களின் அஞ்சலிக்குப் பிறகு இறுதிச் சடங்குக்காக ரத்தன் டாடாவின் உடல் நேற்று மாலை வோர்லி மயானத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அரசு மரியாதையுடன் ரத்தன் டாடாவுக்கு இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டு உடல் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில், அமித் ஷா, பியூஷ் கோயல், ஏக்நாத் ஷிண்டே, தேவேந்திர பட்னவிஸ், அஜித் பவார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவை ஒட்டி, மாநிலத்தில் ஒருநாள் துக்கம் அனுஷ்டிக்குமாறு மகாராஷ்டிர அரசு அறிவித்தது. மேலும், அவரது உடலுக்கு முழு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது. முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் மும்பையில் கூடிய மகாராஷ்டிர அமைச்சரவை, தொழிலதிபர் ரத்தன் டாடாவுக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை வழங்க மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது.

ரத்தன் டாடா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“ரத்தன் டாடா தொலைநோக்குப் பார்வை கொண்ட வணிகத் தலைவர், இரக்கமுள்ள ஆன்மா, அசாதாரண மனிதர். இந்தியாவின் பழமையான, மிகவும் மதிப்புமிக்க வணிக நிறுவனங்களில் ஒன்றுக்கு நிலையான தலைமையை அவர் வழங்கினார். அதே நேரத்தில், அவரது பங்களிப்பு அலுவலக அறையைத் தாண்டி வெகுதூரம் சென்றது. அவரது பணிவு, கருணை, நமது சமூகத்தை மேம்படுத்த அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் அவர் பலருக்குத் தாமாகவே நேசமானார்.

ரத்தன் டாடாவின் மிகவும் தனித்துவமான அம்சங்களில் ஒன்று, பெரிய கனவுகள் மற்றும் திருப்பித் தருவதில் அவரது ஆர்வம். கல்வி, சுகாதாரம், தூய்மை, விலங்குகள் நலன் போன்றவற்றுக்கான பணிகளில் அவர் முன்னணியில் இருந்தார். ரத்தன் டாடா உடனான எண்ணற்ற தொடர்புகளால் என் மனம் நிரம்பியுள்ளது. நான் குஜராத் முதல்வராக இருந்தபோது அவரை அடிக்கடி சந்திப்பேன். பல்வேறு பிரச்சினைகள் குறித்து நாங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வோம். அவரது கண்ணோட்டங்கள் எனக்கு மிகவும் செழுமையாக இருந்தன. நான் தில்லிக்கு வந்த பிறகும் இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்ந்தன. அவரது மறைவு மிகுந்த வேதனை அளிக்கிறது. இந்த சோகமான நேரத்தில் எனது எண்ணங்கள் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அபிமானிகளுடன் உள்ளன.” என குறிப்பிட்டுள்ளார்.

# முரசொலி செல்வம் உடலுக்கு விஜய்யின் மனைவி அஞ்சலி

கோபாலபுரத்தில் வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வத்தின் உடலுக்கு நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய்யின் மனைவி சங்கீதா நேரில் அஞ்சலி செலுத்தினார்.

‘முரசொலி’ நாளிதழின் நிர்வாக ஆசிரியரும், மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் மருமகனுமான முரசொலி செல்வம் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார். அவருக்கு வயது 84.

தி.மு.கவினர் உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் முரசொலி செல்வத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தனர். நேற்று மாலை பெங்களூரில் இருந்து சென்னை கோபாலபுரம் இல்லத்துக்கு முரசொலி செல்வம் உடல் கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. முதல்வர் மு.க ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் முரசொலி செல்வம் உடலை பார்த்து கண்ணீர் விட்டு அழுதனர்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்ட பலர் முரசொலி செல்வம் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர்.





இந்நிலையில் நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய்யின் மனைவி சங்கீதா கோபாலபுரத்தில் வைக்கப்பட்டிருந்த முரசொலி செல்வத்தின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார். மேலும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

அத்துடன், திரையுலகில் இருந்து, ராதிகா, பிரசாந்த், சத்யராஜ், நடிகர் விக்ரம் மனைவி ஷைலஜா உள்ளிட்ட பலரும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.



# காசா பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்!

## 28 பேர் உயிரிழப்பு

காசாவில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 28 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் அந்தத் தாக்குதலில் 54 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசாவின் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் படைகள் காசாவில் உள்ள மருத்துவர்களைத் திட்டமிட்டு கொலை செய்வதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், மருத்துவ வாகனங்களையும் குறிவைத்து அழிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.









# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஜனாதிபதியை சந்தித்தார்

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பஹீம் உல் அஸீஸ் ஹி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தானின் அர்ப்பணிப்பையும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், பாகிஸ்தான் ஜனாதிபதி அஸீப் அலி சர்தாரியின் விசேட வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கையளித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் "இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நெருங்கிய உறவை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஜனநாயகம், பன்மைத்துவம், சட்டத்தின் ஆட்சி, பரஸ்பர புரிதல் மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் எமது ஒத்துழைப்பின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன். இது நம் இரு நாடுகளுக்கும் நல்ல நிகழ்வுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்" -என்று பாகிஸ்தான் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால அரசியல் மற்றும் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஆகியோர் கலந்துரையாடியதுடன், பாதுகாப்புத் துறையில் பாகிஸ்தானின் ஆதரவு இலங்கைக்கு வழங்கப்படும் என உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார்.

கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது, மருத்துவக் கல்விக்காக இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தானில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதுடன், எதிர்காலத்தில் விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கான வாய்ப்புகள் வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கிராமிய வறுமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையின் கால்நடைத் துறையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வலுவான உறவு இந்தச் சந்திப்பில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டதுடன், பல்வேறு துறைகளில் அந்த உறவுகளை மேம்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் கவனம் செலுத்தினர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# 1,000 ஏக்கர் காணியைக் குறுகியகால பயிர் செய்கைக்கு விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை



கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 11,000 ஏக்கர் காணியைக் குறுகியகால பயிர் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அதற்கமைய 5 ஏக்கரை விடக் குறைவான காணி இவ்வாறு வழங்கப்படவுள்ளதுடன், அதற்கென ஒழுங்கான பொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் சந்தித்தபோதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.





# பல்வேறு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்தனர்

இரண்டு தூதுவர்கள், மூன்று உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஆறு நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உயர்மட்ட கலந்துரையாடலில் ஈடுபடுகிறார்.

இலங்கை மற்றும் அந்த நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் உலகளாவிய கூட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவது என்ற தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க இந்த சந்திப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சவூதி அரேபியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், துருக்கி, பலஸ்தீனம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பிரதிநிதிகள் பல்வேறு துறைகளில் இலங்கைக்கும் தமது நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்திக்கும் முக்கிய பிரமுகர்களில், இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி, துருக்கி குடியரசின் தூதுவர் செமிஹ் லுட்ஃபு துர்குட். பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பஹீம் உல் அஸீஸ் ஹி, இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் அந்தலிப் எலியாஸ் மற்றும் தற்போது இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நான்கு நட்சத்திர அமெரிக்க கடற்படை அட்மிரல் மற்றும் அமெரிக்க பசுபிக் கடற்படையின் தளபதி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஆகியோர் அடங்குவர்.

இந்த இராஜதந்திர சந்திப்புகள் இலங்கையின் சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பரஸ்பர அபிவிருத்தி மற்றும் செழுமைக்கான பகிரப்பட்ட வாய்ப்புகளைப் பின்பற்றுவதற்குமான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.













# ஓமந்தையில் காணி பிணக்கு! வாள்வெட்டில் ஒருவர் மரணம்!!

## மேலும் ஒருவர் படுகாயம்

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தையில் காணி பிணக்கு காரணமாக இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை, கதிரவேலுபூவரசங்குளம் பகுதியல் வசிக்கும் இரு குடும்பங்களுக்கிடையில் காணி தொடர்பாக சிறிய பிணக்கு ஒன்று இருந்து வந்துள்ளது.

இந்நிலையில், குறித்த காணியில் மாமன் மற்றும் மருகன் ஆகிய இருவரும் வேலை செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த நபர்கள் மேற்படி இருவர் மீதும் மிளகாய் தூளை அள்ளி வீசிவிட்டு அவர்களை விரட்டி வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று ஊர் மக்கள் தெரி வித்தனர்.

இதன்போது இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். 42 வயதுடைய மூன்று பிள்ளை களின தந்தையான ரூ.திலீபன் படுகாயமடைந்த நிலை யில் உறவினர்கள் மற்றும் ஊர் மக்களால் வவுனியா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இறந்தவரின் உடல் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.









# 10 அரசியல் கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும் யாழ்ப்பாணத்தில் நேற்று வரை வேட்புமனுக்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நேற்று வியாழக் கிழமை வரை 10 அரசியல் கட்சிகளும், 9 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள னர்.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டம் சார்பில் போட்டியிடுவதற்காகவே 19 வேட்புமனுக்கள் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக 34 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர்.

வேட்புமனுத் தாக்கலுக்கு இன்று வெள்ளிக்கிழமை இறுதித் தினம் என்பதனால் இன்று ஒரே நாளில் அதிகளவு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.




# வன்னியில் மக்கள் போராட்ட! முன்னணியும் வேட்புமனு

(கி.வசந்தன்)

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை 4 கட்சிகளை உள்ளடக்கி மக்கள் போராட்ட முன்னணி நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, சோசலிச மக்கள் மன்றம், காலிமுகத்திடல் போராட்டக் குழு ஆகியன இணைந்து மக்கள் போராட்ட முன்னணியாக நாடு முழுவதும் குடைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் மக்கள் போராட்ட முன்னணி நேற்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தது. இதன்போது முன்னணியின் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர்.





# தனிமையில் வசித்து வந்த மூதாட்டி எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

வீட்டில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாந்தோப்பு, கரணவாய் தெற்கைச் சேர்ந்த குணாராஜலிங்கம் ஞானேஸ்வரி (வயது - 70) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவர் உறவினர்கள் ஒருவரின் வீட்டுக்குச் சென்று விட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது வீட்டுக்குச் சென்றிருந்தார். இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை முற்பகல் அவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.



தடயவியல் பொலிஸாரும் தடயங்களைப் பெற்றுக்கொண்டனர். சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடிப் பொலிஸாருக்குத் திடீர் மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் -11.10.2024




இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மூட்டு மற்றும் முதுகு வலியால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருக்க குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக உணர்வீர்கள். நீங்கள் திடகாத்திரமாக இருப்பதாக உணர்வீர்கள்.




இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -11.10.2024

## தனுசு

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தோள் மற்றும் கணுக்கால் வலி ஏற்படலாம்.

## கும்பம்

இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயனளிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும். நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## மகரம்

இன்று பக்குவமாகவும் புத்திசாலித்தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

கண் எரிச்சல் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். செரிமானம் சம்பந்தமான பிரச்சனை உங்களை பாதிக்கும்.

## மீனம்

இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இன்று நீங்கள் மனதளவிலும் உடலளவிலும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park